ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2124/9 - 2019 මැයි මස 21 වැනි අඟහරුවාදා - 2019.05.21

*2124/9 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

### இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் அமைப்பு

அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் அமைப்பின் 44(1) ஆம் சட்டத்தின் கீழ் நியமனம் செய்யப்பட்ட சுற்றுலா அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் இராஜாங்க அமைச்சருக்கான விடயத் துறைகள் மற்றும் அலுவல்களை ஒப்படைத்தல் சம்பந்தமாக, இங்கு கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நடைமுறைப்படுத்தல் வேண்டுமென அரசியல் அமைப்பின் 44(5) ஆம் சட்டத்தின் பிரகாரம் இத்தால் அறிவிக்கிறேன்.

ஜோன் ஏ. ஈ. அமரதுங்க,<br>சுற்றுலா அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும்<br>கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சர்.

2019, ஏப்பிறல் 29.

1A - G 30123 — 377 (2019/05)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

**கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே, சுற்றுலா அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்**

| கடமைகளும் செயற்பாடுகளும் | திணைக்களங்கள், நியதிச் சட்ட சபைகளாக இயங்குகின்ற நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் | செயல்படுத்தப்படும் சட்டங்கள் |
|---|---|---|
| 1. இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் அமுலாக்கம் செய்யப்படும் அனைத்து SLTDA செயற்பாடுகளையும் அமைச்சரின் கலந்தாலோசனையுடன் வகுத்தமைத்தலும், கண்காணித்தலும் மதிப்பிடுதலும்.<br><br>2. நாடளாவிய ரீதியில் சட்ட விரோதமான முறையில் சுற்றுலாத்துறையில் ஈடுபட்டுள்ளோரினது முறைசாரா வகையிலான முன்மொழியப்பட்ட பதிவுச் செயன்முறையின் வெற்றியினை உறுதி செய்தல். (உதாரணம் : ஹோட்டல்கள், சிற்றுண்டிச்சாலைகள், வழிகாட்டிகள், பயண வழிகாட்டிகள் போன்றன) இதன் மூலம் 2019, திசெம்பர் மாதத்துக்கு முன்னர் இவற்றைச் சாதாரண நிறுவனங்களாகக் கொண்டு வருதலும் இச்செயன்முறையை இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் அவதானித்தலும்.<br><br>3. உள்ளக சுற்றுலா செயற்பாட்டின் மற்றும் உள்ளூர் விளம்பர நிகழ்ச்சிகளின் முன்னேற்றத்தின் மீளாய்வும் கண்காணிப்பும். (உதாரணம் : விடுதிகள், வலயங்கள், நிகழ்வுகள் போன்றவை).<br><br>4. கிறிஸ்தவ சமய விவகாரங்கள் தொடர்பாகப் பிரதேச ரீதியான செயலாக்கம், கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் நிகழ்ச்சிகளை முன்னெடுத்தல்.<br><br>5. சுற்றுலாப் பயணிகளின் ஹோட்டல்கள், பயண வழிகாட்டிகள் மற்றும் ஹோட்டல்களை வகைப்படுத்தல்களின் அவசியம் தொடர்பான விடயங்களின் அபிவிருத்தி, கட்டுப்பாடு தொடர்பாக மேற்பார்வை செய்தல்.<br><br>6. இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையுடன் நெருங்கிய மற்றும் வினைத்திறன் மிக்க தொடர்புகளைப் பேணுதல் மற்றும் அதன் முன்னேற்றத்தை வழமையாகக் கண்காணித்தலும் மதிப்பிடுதலும் அத்துடன் விசேடமாக அனைத்துச் சேவைகளையும் ஓரிடத்தில் வழங்கும் இடம் (one stop shop), தராதரங்கள் மற்றும் தர உத்தரவாதப் பிரிவு, ஆராய்ச்சிப் பிரிவு போன்றவற்றின் உற்பத்தித் திறனை வினைத்திறனுடன் உறுதிப்படுத்தல். | | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

**கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே, சுற்றுலா அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்**

| கடமைகளும் செயற்பாடுகளும் | திணைக்களங்கள், நியதிச் சட்ட சபைகளாக இயங்குகின்ற நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் | செயல்படுத்தப்படும் சட்டங்கள் |
|---|---|---|
| 7. அமைச்சினுடைய குறிப்பாக இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினுடைய விவகாரங்கள், நடவடிக்கைகள் தொடர்பில் இராஜாங்க அமைச்சர் என்ற வகையில் சிறந்த முறையில் தெரிந்து வைத்திருத்தல். | | |
| 8. இலங்கைச் சுற்றுலாத்துறையின் 2017-2020 மூலோபாயச் செயற்றிட்டத்தினை இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைந்து முன்னெடுத்தல். | | |
| 9. இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் வருகின்ற சுற்றுலா விடுதிகள், சுற்றுலா வலயங்கள் மற்றும் சுற்றுலா அம்சங் களைத் தொழில் முறையாகச் சிறப்பாகப் பேணுதல் தொடர்பாக மேற்பார்வை செய்தல். | | |
| 10. தாவரவியற் பூங்காக்களின் பராமரிப்பு மற்றும் இலங்கையின் தாவரங்களைப் பாதுகாப்பதில் மலர்ச்செய்கைக் கைத்தொழிலின் மேம்பாடு தொடர்பில் தேசிய தாவரவியல் பூங்காத் திணைக் களத்துடன் இணைந்து உரிய மேற்பார்வை செய்தல். | | |
| 11. வனசீவராசிகள் வளங்களைப் பாதுகாத்தலைக் கண்காணித்தல். | | |
| 12. தேசிய தாவரப் பூங்காத் திணைக்களம், வன விலங்குகள் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் வனசீவராசிகள் நம்பிக்கைப் பொறுப்பு ஆகிய வற்றின் பணிகளுடன் நெருங்கிய வினைத்திறன் மிக்க தொடர்புகளைப் பேணுதலும் அத்தகைய நிறுவனங்களின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தலும், கண்காணித்தலும் மதிப்பிடுதலும். | | |
| 13. மேற்குறிப்பிட்ட கடமைகளுக்கும் பணிகளுக்கும் மேலதிகமாக அமைச்சரால் காலத்துக்குக்காலம் குறித்தொதுக்கப்படும் ஏதேனும் கடமை அல்லது பணி. | | |

06-30

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.